INSTITUTE FOR HEALTH POLICY

**72, Park Street, Colombo 2, Sri Lanka**
Tel: +94 11 231 4041/2/3/5 Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk web: www.ihp.lk twitter: @ihplk

# ஊடக அறிவிப்பு

**திகதி வரை தடையாணை**

திகதி : 12 September 2024
நேரம் : 07:00 PM Sri Lanka Time

**மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்**


செயலாளர்/நிர்வாகி
மின்னஞ்சல் : info ‘at’ ihp.lk

**பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள**

மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi ‘at’ ihp.lk ட்விட்டர் : @ravirannaneliya

## இலங்கை வாக்காளர்களில் பெரும்பாலானோர் அரசாங்கமானது சுகாதாரம் மற்றும் கல்விக்கான செலவின அதிகரிப்பிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என விரும்புகின்றார்கள்

இலங்கை மக்கள் வாக்களிக்கத் தயாராகும் நிலையில், பாரியளவிலான பெரும்பான்மையான வாக்காளர்கள் சுகாதாரம் மற்றும் கல்விக்கான செலவினங்களை அரசாங்கம் அதிகரிக்க வேண்டும் என்று விரும்புவதாக இலங்கையின் கருத்துக்கணிப்பு ஆய்வின் (SLOTS) சமீபத்திய கண்டுபிடிப்புகள் தெரிவிக்கின்றன.





2022 செப்டம்பர் மாதம் முதல், பொருளாதார நெருக்கடியானது, வரவு செலவுத்திட்ட முன்னுரிமைகளை மறுபரிசீலனை செய்ய அரசாங்கத்தை கட்டாயப்படுத்தியதால், SLOTS தொடர்ந்து கருத்துக்கணிப்பில் பதிலளித்தவர்களிடம் அரசாங்க செலவினங்களை அதிகரிப்பதற்கான முதல் இரண்டு முன்னுரிமைகளையும் அரசாங்க செலவினங்களைக் குறைப்பதற்கான முதல் இரண்டு முன்னுரிமைகளையும் அடையாளம் காணுமாறு தொடர்ந்து கேட்டுள்ளது.

2024ம் ஆண்டு முழுவதும், இலங்கை மக்களுக்கு அரசாங்க செலவினங்களை அதிகரிப்பதற்கு தொடர்ச்சியாக முதன்மையான முன்னுரிமைகளாக சுகாதாரம் (78%) மற்றும் கல்வி (64%) இருந்தன. அனைத்து மக்கள் தொகையினரது ஆதரவுடன், பெரும்பாலான இலங்கையர்களால் செலவின அதிகரிப்புக்கு ஆதரவளிக்கப்பட்ட பகுதிகள் இவை மட்டுமே. விவசாயச் செலவினத்தை அதிகரிப்பது அடுத்த முக்கிய முன்னுரிமையாக (33%) காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து உணவு உதவி (9%), வீடமைப்பு (4%), மற்றும் சமுர்த்தி/ அஸ்வெசும (3%) ஆகியன முன்னுரிமைகளாக இருந்தன.

SLOTS கருத்துக்கணிப்பில் பதிலளிப்பவர்கள் செலவினங்களைக் குறைப்பதற்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதில் அதிக தயக்கம் காட்டியுள்ளனர் என்பதில் ஆச்சரியமில்லை. மேலும் வீடமைப்பு என்ற ஒரே வகை மட்டுமே குறைப்பிற்காக பெரும்பாலோரின் ஆதரவைப் பெற்றது. மேலும் அரசாங்கத்திற்கு நிதிப் பற்றாக்குறை ஏற்படும் பட்சத்தில் செலவினக் குறைப்புகளுக்கு அவர்கள் எதற்கு முன்னுரிமை அளிப்பார்கள் என்று கேட்ட போது, வீடமைப்பு (51%) மற்றும் உணவு உதவி (44%) மிகவும் முக்கியமானவையாக தரவரிசைப்படுத்தப்பட்டன. அதைத் தொடர்ந்து சமுர்த்தி/அஸ்வெசுமா (22%), காவல்துறை (14%), வீதிகள் (13%), மற்றும் இராணுவம் (12%) காணப்பட்டன.

சுகாதாரம் மற்றும் கல்விக்கான அரசாங்க செலவினங்களை அதிகரிப்பதற்கான ஆதரவு அனைத்து மக்கள்தொகை மத்தியிலும் பரவலாக இருந்தது. ஏழை மற்றும் வசதியான இலங்கையர்கள் இருவரும் சுகாதாரச் (71% ஒப்பிடுகையில் 79%) செலவினங்களை அதிகரிப்பதனை அவர்களின் முதன்மையான முன்னுரிமையாக தரவரிசைப்படுத்துகின்றனர். வசதியானவர்கள் கல்விக்கு முன்னுரிமை அளிக்கும் வாய்ப்பு அதிகம் (70% ஒப்பிடுகையில் 53%). ஆனால் ஏழை மற்றும் பணக்காரர் இருவரும் இந்த இரண்டு பகுதிகளிலும் செலவினங்களை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை ஒப்புக்கொண்டனர். வயது அடிப்படையில் சில வேறுபாடுகள் இருந்தன, இருப்பினும் முதியவர்களுடன் (60+) ஒப்பிடும்போது இளைஞர்கள் (18-29 வயது) கல்விச் செலவினங்களுக்கு முன்னுரிமை கொடுத்தனர்.




இலங்கை மக்கள் உணவு உதவி மற்றும் சமூர்த்தி/அஸ்வெசுமவை எவ்வாறு பார்க்கிறார்கள் என்பதில் வருமான மட்டத்தின் அடிப்படையில் தெளிவான வேறுபாடுகள் இருந்தன. உணவு உதவிக்கான செலவினங்களை அதிகரிப்பது ஏழை இலங்கையர்களுக்கு (17%) உயர்ந்த முன்னுரிமையாக இருந்த அதேசமயம், வசதியானவர்களுக்கு (5%) இது குறைவான முக்கியத்துவம் கொண்டதாக இருந்தது. இதேபோல், ஏழைகளில் நான்கில் ஒரு பங்கினர் (29%) செலவினக் குறைப்புகளுக்கு இதற்கு முன்னுரிமை அளித்தனர். அதே சமயம் வசதியானவர்களில் கிட்டத்தட்ட பாதிப் பேர் (49%) உணவு உதவிக்கான செலவைக் குறைப்பதனை ஆதரித்தனர். சமுர்த்தி/அஸ்வெசுமாவிற்கும் இதே போன்ற விருப்பத்தேர்வுகள் காணப்பட்டன. ஏழைகள் செலவின அதிகரிப்புக்கு முன்னுரிமை கொடுக்க அதிக வாய்ப்புள்ளது, அதே சமயம் வசதியானவர்கள் செலவினத்தைக் குறைக்க முன்னுரிமை கொடுக்க அதிக வாய்ப்புள்ளது.

இராணுவம் அல்லது காவல் துறைக்கான செலவுகளை அதிகரிக்க எந்த ஆதரவும் இருக்கவில்லை. மேலும் எட்டு இலங்கையர்களில் ஒருவர் இராணுவம் அல்லது காவல் துறைக்கு செலவுகளை குறைக்க

முன்னுரிமை அளிக்கின்றனர். இருப்பினும், ஏழை இலங்கையர்கள் இராணுவம் அல்லது காவல் துறையை செலவுகளை குறைப்பதற்கான முன்னுரிமையாகக் குறிப்பிட அதிகமான வாய்ப்புள்ளது.

வெவ்வேறு இனக் குழுக்களிடையே செலவின முன்னுரிமைகளில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளன. வயது வந்த சிங்களவர்கள் சுகாதாரம் (82%) மற்றும் கல்வி (66%) ஆகியவற்றிற்கு ஏனைய இனக் குழுக்களை விட மேலான முன்னுரிமை கொடுக்க அதிகமாக வாய்ப்பு இருந்தது. இதே சமயம், மற்றவர்களுடன் ஒப்பிடும்போது, வயது வந்த பெருந்தோட்ட /இந்திய தமிழர் மற்றும் முஸ்லீம்கள் உணவு உதவி (தோட்டம் 32%, முஸ்லிம்கள் 27%) மற்றும் வீடமைப்பு (பெருந்தோட்டம் 22%, முஸ்லிம்கள் 22%) ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்க கூடிய வாய்ப்பு உண்டு.

சுகாதாரம் மற்றும் கல்வி ஆகியவை தொடர்ந்து முதல் இரண்டு செலவின முன்னுரிமைகளாக இருந்து வந்தாலும், சுகாதாரத்திற்கான அதிகரித்த செலவினங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் மக்களின் சதவீதம் 2023இன் முதற் காலாண்டில் 58% ஆக இருந்து படிப்படியாக அதிகரித்து 2024 இன் மூன்றாம் காலாண்டில் 87% ஐ எட்டியுள்ளது. உண்மையான வருமானம் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், தனியார் சுகாதாரச் சேவைக்கு பணம் செலுத்துவதில் பெரும்பாலான இலங்கையர்கள் எதிர்கொள்ளும் அதிகரித்து வரும் சிரமங்களுடன், அரசாங்க சுகாதாரத் துறையில் மருந்து மற்றும் பணியாளர்களின் பற்றாக்குறையின் மோசமான தாக்கத்தை இது பிரதிபலிக்கக்கூடும். இதேவேளை, விவசாயத்திற்கான செலவினத்தை அதிகரிக்க ஆதரவு குறைந்துள்ளது.

## மேலும் விவரங்கள் ihp.lkவிலிருந்து கிடைக்கும்

Institute for Health Policy, September 2024, “Large majorities of Sri Lankan voters want the government to prioritize spending increases on health and education”.
*Available at:* https://ihp.lk/research-updates/large-majorities-sri-lankan-voters-want-government-prioritize-spending-increases

## IHP பற்றி

இந்த கருத்துக்கணிப்பை ஆணையிடுவதற்கும் வடிவமைக்ககவும் IHP மட்டுமே பொறுப்பு, மேலும் இதற்கு முழு பொறுப்பு ஏற்றுக்கொள்கிறது. IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிபுகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு, உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் மூன்று தசாப்தங்களாக பல கருத்துக்கணிப்புகளை நடத்தியுள்ளார்.

## முறைமை விவரங்கள்

SLOTS, தற்போதைய கருத்துகள் மற்றும் நிலைமைகளைப் பெறுவதற்காக, ஒவ்வொரு நாளும் இலங்கையில் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களில் பிரதிநிதித்துவ கூறுகளை தொலைபேசி மூலம் பேட்டி எடுக்கின்றது. அனைத்து பேட்டிகளும் முக்கியமான தலைப்புச் சார்ந்த பிரச்சினைகளை ஆராய மூலாதார பொதுக் கேள்வித் தொகுப்பையும், சுழற்சி முறையில் சேர்க்கப்படும் ஏனைய மேலதிகமான கேள்விகளையும் உள்ளடக்கும். பேட்டிகள், IHP ஊழியர்களால் தினமும் தொலைபேசியினுடாக நடத்தப்படுகின்றன. இது தேசிய கள ஆய்வு மூலம் ஆட்சேர்க்கப்பட்ட அல்லது எழுமாற்றாக தொடர்புகொள்ளப்பட்ட கையடக்கத் தொலைபேசி அழைப்புகளை உள்ளடக்கிய பதிலளிப்பவர்களுடன் நடாத்தப்படுகின்றது.

## நிதியுதவி

SLOTS களப்பணியானது 2021 ஆம் ஆண்டு முதல் பல்வேறு நிதியுதவியாளர்களால் ஆதரிக்கப்பட்டுள்ளது. இவர்கள் கேள்வி வடிவமைப்பு, தரவுப் பகுப்பாய்வு அல்லது அறிக்கையிடல் ஆகியவற்றில் எந்தப் பங்கையும் வகிப்பதில்லை. நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை (Neelan Tiruchelvam Trust) , ஆசியா மன்றம் (Asia Foundation), ஐரோப்பிய ஆணையகம் (European Commission) , ஐக்கிய இராச்சியத்தின் உடல் நலப் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK National Institute for Health and Care Research), ஓபன் சொசையட்டி அறக்கட்டளை நிறுவனம் (Foundation Open Society Institute), மற்றும் ஏனையவர்கள் நிதியளித்துள்ளனர். தற்போதைய கள வேலைகளை வெலக்ஸ் ஸ்டிப்டங் அரக்கட்டளை (Velux Stiftung foundation), நியூ யார்க் பல்கலைக்கழகம் அபு தபி (New York University Abu Dhabi), மற்றும் IHPன் பொது நல ஆய்வு நிதி (IHP Public Interest Research Fund) ஆதரிக்கின்றினர். அதோடு ஆய்வின் கண்டுபிடிப்புகள் முந்தைய மற்றும் தற்போதைய நிதி வழங்குனர்களின் எண்ணங்கள் மற்றும் கருத்துக்களை பிரதிப்பலிப்பன அல்ல. மேலும் விவரமான தரவுகள் மற்றும் முடிவுகளை பெற விரும்பும் நபர்கள் IHP உடன் தொடர்பு கொள்ளலாம்.